# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது

இல. 7,923 — 1932 ம் ௵ வைகாசிமீ 13 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

**1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தல யாத்திரையைப்பற்றிய சட்டம்.**

1932 ம் ஆண்டு கதிர்காம எசல திருவிழாவுக்கு வழக்கமான யாத்திரையை நோக்கி, உத்தம தேசாதிபதியவர்கள் 1931 ம் ஆண்டின் இலங்கைச் (இராச்சிய மந்திரசபை) சபையின் கட்டளையின் 93 ம் பிரிவினது அதிகாரங்களைக்கொண்டு 1897 ம் ஆண்டின் 7 ம் இலக்கச் சட்டத்தினுற் திருத்தப்பட்ட 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின் 1 ம் பிரிவின் பிரகாரம் செய்த பிரமாணங்கள்.

டி. பீ. ஜயத்திலக்க,
சுயகாரிய மந்திரி.

சுயகாரிய மந்திரி கந்தோர்,
கொழும்பு, 1932 ம் ஆண்டு வைகாசிமீ 6 ந் திகதி.

பிரமாணங்கள்.

1. (*a*) கதிர்காமத்தில் 1932 ம் ஆண்டு எசல திருவிழா நடக்கும் நாட்களும் யாத்திரிகர் கதிர்காமத்தில் தங்கக்கூடிய காலமும் 15 நாட்கள் மாத்திரம்தான். அதாவது 1932 ம் ஆண்டு ஆடி மாதம் 4 ந் திகதி தொடக்கம் ஆடி மாதம 18 ம் திகதி முடியும் வரைக்கும்.

(*b*) முதலாவதாக சொல்லப்பட்ட தேதிக்குமுன்பாக வருகிற அல்லது குறிக்கப்பட்ட காலத்துக்குப்பின் நிற்கிற யாத்திரிகர்களை குற்றவாளியர்களாக காணப்படும்.

2. "யாத்திரிகர் தங்கியிருக்கும் பாடி" ஊவா மாகாண அரசாட்சி ஏசண்டரின் மேல் அதிகாரத்திலும், "பார்வை செய்கிற உத்தியோகஸ்தர்" என்று பெயர் கொடுக்கப்பட்ட பொறுப்பேற்றிருக்கும் உத்தியோகஸ்தரின் உடன் அதிகாரப் பார்வையிலும் இருக்கும். பின்னுவதாக சொல்லப்பட்ட உத்தியோகஸ்தருக்கு ஒரு வைத்திய உத்தியோகஸ்தரும் ஒரு பொலீஸ் உத்தியோகஸ்தரும் உதவி புரிவார்கள்.

3. கதிர்காமத்தில் திருவிழா நடக்கும் காலத்தில் தொற்று வியாதி உண்டுபடின் பார்வை செய்கிற உத்தியோகஸ்தருக்கு திருவிழாவை நிறுத்தவும் யாத்திரிகர்களை அந்த ஊரை உடனே விட்டு தங்கள் இடங்களுக்கு போகும்படி செய்யவும், இன்ன பாதையாற் போகவேண்டுமென்றும் நியமிக்கவும் தத்துவமுண்டு.

4. பார்வை செய்யும் உத்தியோகஸ்தருக்கு கதிர்காமத்திலும், போகும் பயணத்திலும், திரும்பிச் செல்லும் பயணத்திலும் இதன்கீழ் குறிக்கப்பட்டவைகளைச் செய்ய அதிகாரமுண்டு.

(*a*) யாத்திரிகர்களுக்கு கழுவவும், முழுகவும், தண்ணீ ரெடுக்கவும், தண்ணீர் குடிக்கவும், மலசலபாதைக்கு போகவும் வேறு வேறு தலங்களை நியமிக்கவும் ;

(*b*) அந்தந்த வகுப்பைச்சார்ந்த யாத்திரிகர் தங்கியிருக்கும்படி வெவ்வேறு தலங்களை நியமிக்கவும்;

(*c*) யாத்திரிகர் கூட்டமாக இன்ன பாதையால் செல்லவேண்டுமென்று நியமிக்கவும் ;

(*d*) யாத்திரிகர்களுக்கு கொடுக்கப்படும் தீன் பகிர்ந்து கொடுத்தலைப்பார்த்து நடத்தவம் ;

(*e*) நோய்கொள்ளும் யாத்திரிகர்களுக்குத் தங்கியிருக்கும்படி வெவ்வேறே தலத்தை நியமிக்கவும் அவ்வாட்களுடன் வேறொருவரையும் கலவாமலிருக்கும்படிபண்ணவும், அவர்களுக்கு பயணம்போகக் கூடாதுபோனல் நிறுத்திவைத்திருக்கவும்.

இவ்விதமான காரணங்களைக்கொண்டு பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரினுல் கொடுக்கப்படுகிற கட்டளையை ஏதாவது எவராவது மீறுபவர் குற்றவாளியாக காணப்படுவர்.

5. இந்தப் பிரமாணங்களின்பொருட்டு "யாத்திரிகர் தங்கியிருக்கும் பாடி" என்பது பெரிய கோயிலைச்சுற்றி நாலு பக்கமும் அரைக்கட்டை தூரத்துக்குள் உள்ள பாகமென பொருள்படும்.

6. பயணத்தில் அல்லது தங்கியிருக்குமிடத்தில் சுகத்துக்குப் பழுதானதென்று பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அல்லது வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது அப்படியான உத்தியோகஸ்தர் இல்லாதிருந்தால், பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் காணுந் தீன் சாமானெல்லாவற்றையும் பறித்து அழித்துப்போடப் பொலீசார் தத்துவமுடையவராயிருப்பர். இந்தக் கடமையை அல்லது வேறு எந்தக் கடமையையும் பொலீசார் செய்யும்போது அவ்விதஞ் செய்யவிடாமல் எவராவது தடைபண்ணுபவர் குற்றவாளியாக காணப்படுவர்.

7. பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரிடமிருந்து அல்லது அவரால் தத்துவம் கொடுக்கப்பட்ட உத்தியோகஸ்தரிடமிருந்து உத்தரவுச்சீட்டு பெறுமல் மாடுகளை அல்லது வண்டி மாடுகளை தங்கியிருக்குமிடமிருந்து கால் கட்டைக்குட்பட யாராகுதல் கொண்டுவந்தால் அவர்கள் குற்றவாளியர்களாக காணப்படுவார்கள்.

8. உத்தரவுச்சீட்டுப் பெறுவோர் தங்கியிருக்குமிடத்தில் பார்வை செய்கிற உத்தியோகஸ்தரால் சனங்களின் பொதுச் சுகத்துக்காகவும் சுகாதாரத்துக்காகவும், போக்குவரவுக்கு தகுதியாயும் நியமிக்கப்படும் கட்டளைப் பிரமாணங்களை அநுசரிக்கக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

9. (1) (*a*) எவ்வித சாமான்களையும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் குறித்துவிடும் இடத்திலன்றி வேறெந்த இடத்திலும் விற்கவைத்திருக்கும் எவரும் குற்றவாளியாக காணப்படுவர்.

(*b*) பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அல்லது வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது அவர்கள் இல்லாதிருந்தால் பிரதான பொலீஸ்

உத்தியோகஸ்தர் சுகத்துக்குப் பழுதான போசனமென்று தீர்க்கும் எப்போசனத்தையும் விற்கும் எவரும் குற்றவாளியாக காணப்படுவர்.

**2 (a)** சகல சாப்பாட்டுக்கடைகளும், தேத்தண்ணீர் கோப்பிக் கடைகளும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரின் திருப்திக்கு துப்பரவாகவும் சுகாதாரத்துக்கு ஏற்றதாயும் வைத்திருக்க வேண்டும்.

**(b)** மிஞ்சிய தேத்தண்ணீர், கோப்பி அல்லது பால் அல்லது மிச்சமான சாப்பாடு, சமையல்பாக கழிவுகள், அல்லது குப்பை, நிலத்திலே வீசப்படாது. ஆனால் இவைகளை சுகாதார வேலையாட்கள் அப்புறப்படுத்துவதற்காக ஏற்ற ஒரு பாத்திரத்திலே சேர்த்துவைக்க வேண்டும்.

**(c)** சாப்பாட்டுச் சாமான்களை ஈக்கள் மொய்க்கும்படி திறந்து வைக்கப்படாது.

**10.** யாராயினும் கதிர்காமத்தில் தங்கியிருக்கும் காலத்தில் அரசாட்சியாரால் நியமித்திருக்கு மிடத்தைவிட வேறெந்த விடத்திலும் மலசலங் கழித்தால் அல்லது மலத்தை மண்ணால் மூடாவிட்டால், அல்லது பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரால் நியமிக்கும் தலத்துக்கு மேலே ஆற்றிலிறங்க அல்லது குளிக்கச் சம்பவித்தால் அப்படிச் செய்தவர்கள் குற்றவாளியர்களாக காணப்படுவார்கள்.

**11.** தொற்று வியாதியால் பீடிக்கப்பட்டு பார்வைசெய்கிற உத்தியோகஸ்தருக்கு அல்லது வைத்திய உத்தியோகஸ்தருக்கு அல்லது பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தருக்கு அது விஷயத்தை அறிவிக்கத் தவறும் எவரும் அல்லது அவ்வியாதி வந்த நோயாளியை ஒளித்து வைப்பதற்கு உதவி செய்யும் அல்லது தூண்டிவிடும் எவரும் குற்றமுடையவராக எண்ணப்படுவார்.

**12.** சகல பேர்களும் பயணத்திலும் கதிர்காமத்திலும் பார்வை செய்கிற உத்தியோகஸ்தர் அல்லது பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் நியமிக்கு மிடத்தில் விடுதிவிட வேண்டும். அப்படிச் செய்ய மறுக்கும் அல்லது செய்யாது விட்டுவிடும் எவரும் குற்றமுடையவராகக் கொள்ளப்படுவர்.

**13** பார்வை செய்கிற உத்தியோகஸ்தரின் உத்தரவை முன்னதாக பெற்றுக்கொள்ளாமல் கதிர்காமத்தில் பெரிய தெருக்களுக்குச் சேர்ந்த இடத்தை பிடிக்கக்கூடியதாக யாராவது ஒரு கொட்டிலைக் கட்டினாலும், அல்லது ஒரு கட்டிடத்தை பெருப்பித்துக் கட்டினாலும் குற்றமுடையவராகக் காணப்படுவார்.

---

## காணி விற்பனவு.

**Mullaittivu No. 53.—1932** ம் ஆண்டு ஆடிமீ 4 ந் திகதி திங்கட்கிழமை முல்லைத்தீவு வாசிகசாலையில் தன் ஆபிசில் வட மாகாணத்து முல்லைத்தீவு டிஸ்திறிக் கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

34 காணித்துண்டுகள், வட மாகாணத்து முல்லைத்தீவு டிஸ்திறிக்கின் கடற்கரைப் பற்றுப் பகுதியிலிருக்கின்றது.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 7,548. குறிச்சி—முல்லைத்தீவு சுகாதாரசங்க எல்லைக்குள். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | முடவன்குளத்துக்காடு | — | கீழ்காடு | 1 | 1 | 8 | 30* |
| 2 | ஷை | — | கீழ்காடு ரோட்டுக்காக விடப்பட்டது | 0 | 1 | 20 | —† |
| 3 | முடவன்குளத்தருகில்பில | சுப்பர் இளையதம்பி | கீழ்காடு | 2 | 0 | 9 | 30* |
| 4 | முடவன்குளத்துக்காடு | — | கீழ்காடு, வண்டிப்பாதைக்காக விடப்பட்டது | 0 | 1 | 14 | —† |
| 5 | முடவன்குளக்காடு | முருகர் சின்னையா | கீழ்காடு | 0 | 3 | 28 | 30* |
| | பிளான் இலக்கம் 7,943. குறிச்சி—வட்டுவாகல்லு. உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | மணல்காடு | — | காடு, வட்டுவாகல்லு ஆற்றுக்கு விடப்பட்டது | 0 | 2 | 27 | —† |
| 2 | ஷை | கே. விசுவலிங்கம் | காடு | 0 | 2 | 36 | 20 |
| 3 | ஷை | .. | காடு, பாதைக்கு விடப்பட்டது | 0 | 0 | 19 | —† |
| | பிளான் இலக்கம் 8,156. குறிச்சி—வட்டுவாகல்லு. உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | மணல்காடு அல்லது கறுவாயன் காடு | என். இளையதம்பி | புதிதாய்த் துப்பரவுசெய்தது | 1 | 1 | 9 | 20 |
| 2 | ஷை | — | காடு, பாதைக்கு விடப்பட்டது | 0 | 0 | 18 | —† |
| | பிளான் இலக்கம் 8,157. குறிச்சி—வட்டுவாகல்லு. உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | மணல்காடு | — | பாண்நிலம் | 0 | 1 | 28 | 20 |
| 2 | ஷை | — | பாண்நிலம், பாதைக்கு விடப்பட்டது | 0 | 1 | 2 | —† |
| 3 | ஷை | எஸ். அருணசலம் | பாண்நிலம் | 1 | 0 | 13 | 20 |
| 4 | ஷை | — | பாண்நிலம், பாதைக்கு விடப்பட்டது | 0 | 0 | 8 | —† |
| | பிளான் இலக்கம் 7,757. குறிச்சி—வெள்ளாமுள்ளிவாய்க்கால். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | இலுப்பையடிவளவு | எஸ். கணபதிப்பிள்ளை | கீழ்காடு | 3 | 0 | 8 | 25 |
| 2 | ஷை | — | பாண்நிலமும் வண்டிப்பாயையும் வண்டிப்பாதைக்கு விடப்பட்டது | 0 | 1 | 7 | —† |
| 3 | ஷை | — | கீழ்காடு, பாதைக்கு விடப்பட்டது | 0 | 0 | 23 | —† |
| | பிளான் இலக்கம் 8,105. குறிச்சி—வெள்ளாமுள்ளி வாய்க்கால். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | புறக்காட்டுத்தறை | — | பாண்நிலம், பாதைக்கு விடப்பட்டது | 0 | 1 | 1 | —† |
| 2 | ஷை | — | கீழ்காடு | 1 | 0 | 20 | 20 |
| 3 | ஷை | எஸ். கணபதிப்பிள்ளை | கீழ்காடு | 4 | 3 | 24 | 20 |
| | பிளான் இலக்கம் 8,106. குறிச்சி—வெள்ளாமுள்ளிவாய்க்கால். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | முள்ளிமோட்டை | — | கீழ்காடு, பாதைக்கு விடப்பட்டது | 0 | 1 | 28 | —† |
| 2 | ஷை | எஸ். முருகுப்பிள்ளை | கீழ்காடு | 5 | 3 | 15 | 20 |
| | பிளான் இலக்கம் 6,157. குறிச்சி—கரையாமுள்ளிவாய்க்கால், உரித்தாளி—முடியும் பொன்னம்பலம் பெண் தங்கம்மாவும் மறுவும் அருகதனம். | | | | | | |
| 1 | சடைவைக்கடியில்வளவு | — | தோட்டம், ஒரு மண்வீடு உள்ளது | 0 | 2 | 7 | 20·10‡ |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | **பிளான் இலக்கம் 7,075. குறிச்சி—கரையாமுள்ளிவாய்க்கால். உரித்தாளி—முடி.** | | | | |
| 1 | மணல்துண்டு .. | எம். எஸ். ஸ்தீபின் வாஸ் | பாண்நிலம் .. .. | 6 | 3 | 11 | 30 |
| 2a | டிை .. | — | பாண்நிலம், பாதைக்கு விடப்பட்டது | 0 | 0 | 37 | —† |
| 2b | டிை .. | வ. சவரிமுத்து .. | பாண்நிலம் .. .. | 4 | 0 | 10 | 30 |
| | | | **பிளான் இலக்கம் 7,951. குறிச்சி—கரையாமுள்ளிவாய்க்கால். உரித்தாளி—முடி.** | | | | |
| 1 | பயதியடிவளவு .. | எஸ். இளையதம்பி .. | கீழ்காடு .. | 2 | 2 | 17 | 25 |
| 2 | டிை .. | — .. | கீழ்காடு, பாதைக்காக விடப்பட்டது | 0 | 2 | 19 | —† |
| 3 | டிை .. | — .. | கீழ்காடு .. .. | 1 | 0 | 9 | 25 |
| | | | **பிளான் இகக்கம் 4,489. குறிச்சி—தண்ணியூற்று. உரித்தாளி—முடி.** | | | | |
| 10 | பிள்ளையடியில்தோட்டம் .. | — .. | புகையிலைத்தோட்டம் .. | 0 | 3 | 27 | 30 |
| 11 | மருதடிககாணி .. | — .. | தோட்டமும் நெல்வயலும் .. | 0 | 3 | 17 | 16‡ |
| | | | **பிளான் இலக்கம் 7,509. குறிச்சி—தண்ணியூற்று. உரித்தாளி—முடியும் அம்பலவி சின்னக்குட்டியும் மறுவும்.** | | | | |
| 1 | கட்டைக்கரையடிவளவு .. | — .. | தோட்டம், 2 பனைமரங்களுள்ளது | 0 | 0 | 12 | —§ |
| | | | **உரித்தாளி—முடியும் சின்னவி கதிரவேலன் கைம்பெண் சின்னாச்சியும்.** | | | | |
| 2 | நாவலடிவளவு .. | — .. | பனைமரத்தோட்டம் .. | 0 | 1 | 1 | —§ |
| | | | **உரித்தாளி—முடியும் எஸ். தம்பையா பெண் பொன்னாச்சியும் 2 பேரும்.** | | | | |
| 3 | நாராணிவளவு .. | — .. | தோட்டம், 45–50 வயதுள்ள 2 தென்னைமரங்களும் 7 பலா மரங்களும் உள்ளது | 0 | 1 | 5 | —§ |
| | | | **உரித்தாளி—முடி.** | | | | |
| 4 | டிை .. | — .. | பாண்நிலம், றோட்டுக்காக விடப்பட்டது | 0 | 0 | 12 | —† |
| | | | **உரித்தாளி—முடியும் அசன் பிச்சைத்தம்பியும்.** | | | | |
| 6 | அசன்வளவு .. | — .. | கீழ்காடு .. .. | 0 | 0 | 29 | 30‡ |
| | | | **உரித்தாளி—முடியும் அசன் பிச்சைத்தம்பியும் மறுவும்.** | | | | |
| 7 | டிை .. | — .. | தோட்டம், 45–50 வயதுள்ள 6 தென்னைமரங்களும் 7 பலா மரங்களும் உள்ளது | 0 | 1 | 15 | —§ |
| | | | **உரித்தாளி—முடி.** | | | | |
| 8 | டிை .. | — .. | பாண்நிலம், றோட்டுக்காக விடப்பட்டது | 0 | 0 | 14 | —† |
| | | | **பிளான் இலக்கம் 7,690. குறிச்சி—தண்ணியூற்று. உரித்தாளி—முடி.** | | | | |
| 1 | கட்டைக்காரையடியில் காடு | யூசுப்பு முகம்மது மீரா லெவ்வை | காடு .. .. | 2 | 0 | 7 | 50 |
| 2 | டிை .. | — .. | காடு, பாதைக்காக விடப்பட்டது .. | 0 | 0 | 17 | —† |
| | | | **பிளான் இலக்கம் 7,408. குறிச்சி—தண்ணியூற்று. உரித்தாளி—முடி.** | | | | |
| 4 | கட்டைக்காரையடிவளவு .. | குப்பைத்தம்பி பைக்கிரு | கீழ்காடு .. .. | 1 | 0 | 16 | 30 |
| | | | **பிளான் இலக்கம் 7,626. குறிச்சி—கணுக்கேணி உரித்தாளி—முடி.** | | | | |
| 1 | மாவடியில்பிலக்காடு .. | — .. | கீழ்காடு, றோட்டுக்காக விடப்பட்டது | 0 | 1 | 13 | —† |
| 2 | டிை .. | சின்னர் சின்னையா .. | கீழ்காடு .. .. | 0 | 3 | 39 | 30 |
| 3 | டிை .. | வெற்றிவேலு சிற்றம்பலம் | கீழ்காடு .. .. | 3 | 1 | 6 | 30 |
| 4 | டிை .. | கணபதிப்பிள்ளை சபாபதி | கீழ்காடு .. .. | 4 | 2 | 24 | 30 |
| 5 | டிை .. | — .. | கீழ்காடு, பீலிக்காக விடப்பட்டது | 0 | 0 | 26 | —† |
| | | | **பிளான் இலக்கம் 7,704. குறிச்சி—கணுக்கேணி. உரித்தாளி—முடி.** | | | | |
| 1 | மாவடிப்பில .. | கே. சின்னத்தம்பி .. | கீழ்காடு .. .. | 6 | 0 | 13 | 30 |
| | | | **பிளான் இலக்கம் 7,827. குறிச்சி—கணுக்கேணி. உரித்தாளி—முடி.** | | | | |
| 1 | வலம்புரிக்காடு .. | — .. | கீழ்காடு, நீர்பாய்ச்சல் கந்தோரின் றோட்டுக்கு விடப்பட்டது | 0 | 0 | 37 | —† |
| 2 | வலம்புரியடிக்காடு .. | என். இளையதம்பி .. | கீழ்காடு .. .. | 2 | 3 | 29 | 25 |
| 3 | வலம்புரிககாடு .. | — .. | கீழ்காடு, வண்டில்பாதைக்காக விடப்பட்டது | 0 | 0 | 27 | —† |
| | | | **பிளான் இலக்கம் 7,833, குறிச்சி—மாமூலை. உரித்தாளி—முடி.** | | | | |
| 1 | மந்துக்காடு .. | — .. | கீழ்காடு, பாதைக்காக விடப்பட்டது | 0 | 1 | 17 | —† |
| 2 | டிை .. | கே. சன்முகம் .. | கீழ்காடு, 30 வயதுள்ள 50 பனை மரங்களுள்ளது | 2 | 3 | 6 | 33 |
| 3 | நாவல்காடு .. | டிை .. | கீழ்காடு .. .. | 1 | 0 | 13 | 30 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம் | விசாலம். ஏ. றூ. ப. | தீர்ப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 7,832. குறிச்சி—குமாரபுரம். உரித்தாளி—முடி. | | | | |
| 1 | குமாரபுரக்காடு .. | கே. விஞசித்தம்பி .. | கீழ்காடு .. .. | 5 1 22 | 25 |
| 2 | ஷை .. | — .. | கீழ்காடு .. .. | 0 3 37 | 25 |

* இக்காணிகள் கட்டிடத்துக்குத் தகுந்ததல்ல.
† இக்காணிகள் அரசாட்சியாரின் தேவைக்கு விடப்பட்டது, விற்பனவுக்கல்ல.
‡ இக்காணிகள் அருகதனக்காரருக்கு G. O. 812 ன்படி கொடுக்கப்படும்.
§ காணிக்காரருக்குக் கொடுக்கப்படும்.

இக்காணிகளைப்பற்றிய வேறு விபரங்கள் முல்லைத்தீவு அரசாட்சி உதவி ஏசன்றுத்துரை அவர்களிடத்திலும் படங்களைப்பற்றி சர்வேயர் ஜெனறல் அவர்களிடமும் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1932 ம ஆண்டு வைகாசிமீ 7 ந் திகதி.

சீ. வீ. பிறேயின்.
காணிக் கொம்மிஷனர்.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் புசெல்லெவாப் பட்டணத்திற்கு இடுகாடு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமப்படத்து இல. 9,199. குறிச்சி—ஹெல்பொட, தம்பொடகோறளை, கொத்மலெப் பிரிவு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | டெல்ரா எஸ்ரேற் .. | ரேப்பென்ரைன் மாங்கனுள்ள காணி | ஹென்றி ஞேஜேர்ஸ் மக்கள் கொம்பெனிக்காரர் (ஏசண்டுகள் : கொழும்பு போசாங்குவே கொம்பெனிக்காரர்) | 1 0 1·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ (ஜூன்) ஆனி மாசம் 24 ந் தேதியிலன்று பின்னேரம் 2·30 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1932 ம் ௵ மேமீ 9 ௳.

எச். டபிள்யு. கொட்றிங்ரன்,
மத்திய மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் உடுவெல என்னுங் கிராமத்துக்கு இடுகாடு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 9,181. குறிச்சி—உடுவெல உடாகம, வடகந்தாஹ கோறளை, பாத்தஹேவகெத்த.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | ஹுனுவெல்ல எஸ்ரேற் .. | பத்தன (பரிபாலிப்பின்றி விடப்பட்ட காப்பி எஸ்ரேற்) ஒரு கால்நடைப்பாதை யுள்ளது | (1) கண்டி, ஹலஹுவாவிலுள்ள என்சர் ஹரிஸ் ; (2) கண்டி ரிறினிற்றிக் கல்லூரித் தலைமை ஆசிரியர் ; (3) உடுவெல பன்சாலை தம்மானந்த தெறே | 1 2 0 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ ஜூன் மாசம் 24 ந் தேதியிலன்று பின்னேரம் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1932 ம் ௵ மேமீ 9 ௳.

எச். டபிள்யு. கொட்றிங்ரன்,
அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் புலோலி கிராமச்சங்கக்கோட்டு வளவைப் பெருப்பிப்பதாகிய பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 8,033. குறிச்சி—புலோலி கிழக்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | இரவிப்பிள்ளை சீமா .. | பனங்காணி .. | சிங்கப்பூரில் இருக்கும் வல்லிபுரஞ் செல்லையா .. | 0 0 14·1 |
| 1A | ஷை .. | வெறுங்காணி .. | (1) வல்லிபுரம் பெண் சின்னப்பிள்ளை, (2) தாமு பெண் பிள்ளை, (3) முருகேசு பெண் கனகம்மா, (4) எஸ். சிவராசசிங்கம், (5) சபாபதி பெண் பூரணம், (6) சீனிவாசகம் மகள் ரத்தினம் | 0 0 1·2 |
| 1B | ஷை | பனங்காணி .. | சிங்கப்பூர் வல்லிபுரம் செல்லையா .. .. | 0 0 0·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1932 ம் ஞு ஆனி (ஜூன்) மாசம் 14 ந் தேதியிலன்று காலமே பத்து மணிக்கு பரித்தித்துறை வாடியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிக்கும் அக்காணிகளின் உறுதிகளைக் கொணர்ந்து காட்டும்படிக்கும் இதனால் அவர்களிடதிற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1932 ம் ஞு வைகாசிமீ 6 ந் வ.

ஈ. தீ. டைசன்,
வட மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரம்.

**1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.**

*காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்*
*நொம்பர். 114, (மாத்தளை).*

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் ஏதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1932 ம் ஞு (மே) வைகாசிமீ 13 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச்சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணிகளை முடிகுரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1932 ம் ஞு (ஏப்றில்) சித்திரைமீ 6 ந் தேதியிலன்று மாத்தளைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

சீ. ஈ. ஜோன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டவர்கள், மாத்தளை.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மாத்தளை உதவி அரசாட்சி ஏசண்டவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

*அட்டவணை.*

மத்திய மாகாணத்தில் மாத்தளை ஜில்லாவில் மாத்தளை கீழ்ப்பிரிவின் மாத்தளை பல்லேசியா பற்றின் குறுவாவா என்னும் கிராமத்திலுள்ள கீழ்கண்ட காணித்துண்டுகள்:—

பிரதமபடம் 8,973.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | வறவேகேனு .. .. | 0 | 0 | 9 |
| 2 | ஷை .. .. | 0 | 2 | 27 |
| | | 0 | 2 | 36 |

எல்லைகள்.—கிழக்கு: பி. அப்புகாமியும் மறுபேராலும் உரித்தாடப்படும் கொடகும்புறகெதறவத்தையும், கே. அப்புகாமியும் மறுபேராலும் உரித்தாடப்படும் வறவேவத்தையும், ஜே. கொஸ்தாவும் மறுபேராலும் உரித்தாடப்படும் லோங்வில்லேதோட்டமும்;
தெற்கு: மலகந்துரு;
மேற்கு: கலேகொலுவாவிலிருந்து றர்தோட்டைக்குப் போகும் ரோட்டு.

முன் ஒவ்வோர் கேள்விக்காரரும் முகாமுகமாய்க் கொடுக்க வேண்டியது. மேற்குறித்த நேரத்தின் பின் கொடுக்கப்படும் அல்லது தவால் மார்க்கமாக அனுப்பப்படும் கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படமாட்டா.

கேள்விப்பத்திரமனுப்பப்படும் உறைகள் ஒவ்வொன்றிலும் மேற்பக்கத்து இடது மூலையில் "ஆயக்குத்தகைக் கேள்விப்பத்திரம்" என்று எழுத வேண்டியது.

இதனடியிற் காட்டப்படும் ஒவ்வோர் ஆயத்துக்கும் பிறம்பு பிறம்பான கேள்விப்பத்திரங்களனுப்பப்படவேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் கேள்வி ஏற்றவுடன் கேள்வித்தொகையின் பத்திலொன்று முற்பணமாகக் கட்ட வேண்டியது. பின்னர் உத்தம தேசாதிபதியவர்கள் மேற்படி கேள்வியை அங்கீகாரஞ்செய்து அவ்வங்கீகாரம் கேள்விக்காரருக்கு அறிவிக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் கேள்வித்தொகையின் அரைவாசிக்குப் பெறுமதியான ஆதனம் அல்லது கேள்வித்தொகையின் மூன்றிலொருபங்கை ரொக்கமாகப் பிணைகட்டவேண்டியது.

முடிக்குரிய பிரக்கிராசியார் கேள்விக்காரர் பிணைகொடுக்கு மாதனங்களினுறுதிகளைப் பரிசோதனை செய்யவும் பிணையுறுதியை எழுதவும் சரியெனத் தீர்ப்புச் சொல்லவும் வேண்டிய செலவுகளுக்காகவும் 1919 ம் ஆண்டு 10 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி தேவையான முத்திரைச் செலவுக்காகவும் தேவையான பணத்தை கேள்விக்காரரே கட்டவேண்டியது.

பிணைகொடுக்கு முறுதிகளுடன் அவ்வுறுதிகளிற் சொல்லப்பட்ட ஆதனங்களின் பெயரால் ஒரு பிசகுகளுமில்லையென்று பூமி பதிவு கந்தோர் தலைவரிடமிருந்து ஓர் அறிக்கைப் பத்திரமுமிணைக்கப்பட வேண்டும். இப்பத்திரங்களின் செலவுகளெல்லாம் பிணை கொடுப்பவர்களே பொறுக்கவேண்டும்.

கேள்விகளின் எல்லாவற்றையும் அல்லது சிலவற்றை ஏற்றுக்கொள்ளாது விடவும் அல்லது கேள்விகளின் சில பாகங்களையே ஏற்றுக்கொள்ளுந் தத்துவம் உதவி ஏசண்டுத் துரையவர்களுக்குண்டு.

இன்னும் விபரங்கள் தேவையாயின் புத்தளங் கச்சேரியிற் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

*வாய்க்கால்கள்.*

1. நாத்தாண்டியா | 2. மூனுத்துப் பிரிவு | 3. பாலாவி.

*துறைகள்.*

1. புத்தளம் ஏத்தாலை
2. புத்தளம் கற்பிட்டி.
3. கறபிட்டி காரத்தீவு.
4. கற்பிட்டி முகத்துவாரம்.
5. சலாபம் முகத்துவாரம்.

வே. குமாரசுவாமி,
புத்தளம் உதவி ஏசண்டுத்துரை அவர்கள்.

புத்தளம் கச்சேரி,
1932 ம் ஞு வைகாசிமீ 11 ந் தேதி.

---

## கேள்விப் பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

1932 ம் ஆண்டு ஐப்பசிமீ 1 ந் திகதி துவக்கம் 1932 ம் ஆண்டு புரட்டாதி மாசம் 30 ந் திகதி வரையிலுள்ள ஒரு வருடக் காலத்துக்கு இதனடியிற் காட்டப்படும் புத்தளம் சலாபம் டிஸ்திறிக்குகளிலுள்ள ஆயகுத்தகைகளை வாங்குவதற்கு விரும்புவோர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களை ஒழுங்காகக் கையொப்பமும் திகதியுமிட்டு புத்தளம் உதவி ஏசண்டுத் துரையவர்களுக்கு 1932 ம் ஆண்டு ஆனிமீ 1 ந் திகதி, பிற்பகல் 3 மணிக்கு

---

## 1912 ம் ஆண்டின் 8 ம் இலக்க மதுபானத்தீர்வைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்.

*யாழ்ப்பாண டிஸ்திறிக்கிலுள்ள கள்ளுக்குத்தகை விற்பனவு.*

1932 ம் ஆண்டு வைகாசி மாதம் 6 ந் திகதியில் பிரசுரிக்கப்பெற்ற "கசெற்" பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்ட கள்ளுக்குத்தகை விற்பனவுக் கட்டுப்பாடுகளுக்கும், 1929 ம் ஆண்டு சித்திரை மாசம் 12 ந் திகதியில் பிரசுரிக்கப்பெற்ற "கசெற்" பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்ட சகல மதுபான லைசென்சுகளுக்கும் பொதுவான கட்டுப்பாடுகளுக்

கும் அமைய, 1932 ம் ஆண்டு ஆடி மாசம் 1 ம் திகதி முதல் 1933 ம் ஆண்டு ஆனி மாசம் 30 ந் திகதிவரையும் பின்னுற் காணப்படும் தவறணைகளில் சில்லறையிற் கள்ளு விற்கும் உரித்தை வேண்டுவதற்கு தெண்டர்கள் வடமாகாணம் கவண்மேந்து ஏசென்றரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஒவ்வொரு கேள்விக்காரரும் தெண்டர் பத்திரத்தோடு 50 ரூபாவுக்கு வைப்புப் பணங் கட்டியதற்கு அறிகுறியாக திறைசேரியில் அல்லது கச்சேரியிலிருந்து பெற்ற பற்றுச்சீட்டை அணைத்துவிட வேண்டும். குத்தகைகாரன் இன்னுரென்று தெரிவித்த மாத்திரத்தில் அவர் கட்டுப்பாட்டுக் கொந்தீசுகளுக்கு ஒப்பமிட்டுக் கொடுக்க வழுவினுல் அப்படியான வைப்புப்பணத்தை இழந்து விடவேண்டிவரும். குத்தகைத் தெண்டரில் சித்தியடையாதவர்களுடைய வைப்புப்பணம் விற்பனவு முடிந்தவுடன் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. ஒரு தவறணைக்கு ஒரு ஆள் ஒரு தெண்டருக்கு மேல் அனுப்ப உத்தரவில்லை.

4. ஒவ்வொரு தெண்டரையும் ஒரு என்வெலப்பில் அடைத்து அந்த என்வெலப்பின் இடது மேற்புறத்தில் தெண்டர் போடப்படும் தவறணையின் பேரையும் எழுதிவிட வேண்டும்.

5. தெண்டர்கள் 1932 ம் ஆண்டு வைகாசி மாசம் 30 ந் திகதி காலை 10 மணி வரையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

6. தெண்டர்களில் காட்டப்பட்ட தொகைகள் குறைவாயிருந்தால், உடனே தவறணைகளை ஏலத்தில் போடும் உரித்துக் கவண்மேந்து ஏசென்றருக்குண்டு.

7. உரித்தைகொண்ட கொள்வனவுகாரன் இன்னுரென்று வெளிப்படுத்தியவுடனே அவர் கட்டுப்பாட்டுக் கொந்தீசுகளுக்கு ஒப்பமிட்டு கவண்மேந்து ஏசன்றரிடம் உரித்தின் இரண்டு மாதக் குத்தகையளவான ஓர் பணத்தொகையை பிணைப்பணமாகக் கட்டவேண்டும்.

8. கவண்மேந்து ஏசண்றர், தம்மனதுக் கிசைந்தபடியாதாயினு மொரு கேள்வியை ஏற்றுக்கொள்ளாது மறுத்து விடுதற்கு அதிகாரமுடையவராவர்.

9. கொந்தீசுக் கட்டுப்பாடுகளையும் வேறு விபரங்களையும் யாட்பாணங் கச்சேரியில் கேட்டுப் பெறறுக்கொள்ளலாம்.

தவறணைகளின் விபரம்.

1. காரம்பன்
2. சுருவில்
3. சிவியாதெரு மேற்கு
4. சுண்டிக்குளி (சொய்யாத் தோட்டம்)
5. சுண்டிக்குளி (தல்லாலை)
6. கரையூர்
7. வண்ணார்பண்ணை தென் கிழக்கு (நாராக்குளம்)
8. வண்ணார்பண்ணை தென் கிழக்கு (ஆரியகுளம்)
9. அச்சுவேலி
10. சாவகச்சேரி
11. எளுதுமட்டுவாள் தெற்கு
12. எளுதுமட்டுவாள் வடக்கு
13. மிருசுவில்
14. புலோலி மேற்கு
15. பரித்தித்துறை
16. குடத்தனை
17. நாகர் கோயில்
18. மாசார்
19. இளாலி

14 ம், 15 ம் நொம்பர் தவறணைகளைத் தவிர்ந்த மற்றைய தவறணைகள் காலை 8 மணிக்குத் துறக்கப்பட்டு மாலை 6·30 மணிக்கு மூடப்படும் 14 ம், 15 ம் நொம்பர் தவறணைகள் காலை 8 மணிக்குத் துறக்கப்பட்டு மாலை 7 மணிக்கு மூடப்படும்.

ஆர். ஜே. வில்கின்சன்,
கவுண்மேந்து ஏசன்றுக்காக.

யாட்பாணங் கச்சேரி
1932 ம் ஆண்டு வைகாசிமீ 10 ந் ௳

---

## உத்தியோக சம்பந்தமில்லாத அறிவித்தல்.

கொழும்பு டிஸ்றிக் சியறு கோறளை உடுகாபத்துவே பஸ்யாவியில் இருக்கும் டொன் அர்நோலிஸ் சமரக்கோன் ஆகிய நான் இலங்கை அரசாட்சியின் 1907 ம் ஞு 1 ம் இலக்கச் சட்டத்தின் செடூல் 1B ன் 2 ம் பிரமாணத்தின்படி இன்று துவக்கம் 3 மாசத்துக்குப்பின் குருநாக்கல் டிஸ்றிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ்வாக வேலை பார்க்கிறதற்கு றிஜிஸ்ருர் ஜெனறல் அவர்களுக்கு மனுச் செய்வேனென்று இத்தால் விளம்பரப்படுத்துகிறேன்.

டி. ஏ. சமரக்கோன்.

1932 ம் ஞு மார்ச்சுமீ 3 ந் திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.